
# அருள் ஒளி





வெளியீடு

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**தெல்லிப்பழை**

**இலங்கை**

**2010**

பங்குனி,சித்திரை இதழ்

**மலர் 74**

# தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளிர் இல்ல 28வது ஆண்டு விழா




பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேன் முறையீட்டு
நீதிமன்ற நீதியரசர் சுந்தரம் ஶ்ரீஸ்கந்தராஜன் உரையாற்றும் காட்சி



சிறப்பு விருந்தினர்
மல்லாக மாவட்ட நீதிபதி உயர் திரு. க.அரியநாயகம் அவர்கள் உரையாற்றும் காட்சி

உ



அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

*ஆசிரியர்:*

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

*உதவி ஆசிரியர்:*

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2010 விரோதி வருடம் பங்குனி

மலர் 74

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74 NEWS/2006Y


# நூற்றாண்டு விழாக் காணும் சைவப் பாரம்பரியம் மிகுந்த கல்லூரிகள்

இவ்வாண்டு எம் மண்ணில் புகழ் பூத்த மூன்று கல்லூரிகள் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றன. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி. இம்மூன்று கல்லூரிகளும் சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை காப்பதற்காக நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சான்றோர்களால் உருவாக்கப்பட்ட உன்னத கல்லூரிகள். நல்லை நகர் நாவலர் பெருமான் ஆரம்பித்து வைத்த சைவத்தமிழ் பாரம்பரியத்தின் ஊடாக "சுதேசிகளாகிய நாமே எமக்குப் பொருத்தமான பாடசாலைகளை உருவாக்குதல்" என்ற சிந்தனையின் அடிப்படையில் உருவான வரலாற்றுக் கல்லூரிகள் வரிசையில் இம் மூன்று கல்லூரிகளுக்கும் தனித்துவமான சிறப்புக்கள் நிறையவுண்டு. நாவலர் வழியில் வாழ்ந்த பாவலர் துரையப்பாபிள்ளையின் உயரிய அர்ப்பணிப்பால் எழுந்தது மகாஜனாக் கல்லூரி. இக்கல்லூரி நகர்ப்புறப் பாடசாலைகளுக்கே சவாலாக நின்று நிலை பெற்ற கல்லூரி. கலை வளமும்,கல்வி வளமும் ஒருங்கே வளர்ந்த உன்னத கல்லூரி. சரித்திரம் படைத்த இக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபராக விளங்கிய திருவாளர் தெ. து. ஜெயரட்ணம் அவர்களின் ஆளுமையைப் பேசாத கல்வி உலகம் இல்லை. அப்பெருமகனார் தெல்லிப்பழை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராக விளங்கிய சிறப்பும் பெருமைக்குரியது. கொக்குவில் இந்துக் கல்லூரி இந்துக் கல்லூரி அதிகாரசபை என்ற உயர் சேவையின் முகாமைத்துவத்தில் வளர்ச்சிபெற்ற கல்லூரி. வரலாற்று அறிஞர், இளைஞர் காங்கிரஸ்சில் பிரகாசித்த ஹன்டி பேரின்பநாயகம் அதிபர் காலத்தில் ஒளி பெற்று நிலை பெற்ற கல்லூரி. முருகன் ஆலய வீதியில் தெய்வச் சூழலில் இயங்கும் கல்லூரி. வியத்தகு சாதனைகள் படைத்தகல்லூரி. நூற்றாண்டு விழாக் காணும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மகத்துவம் வாய்ந்த கல்லூரி. சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் உறவினர் ஒருவரால் மிசனறிக் கலாசாரத்திலிருந்து மானிப்பாய் மக்களைக் காக்க எழுந்த கல்லூரி. சுவாமி விபுலானந்த அடிகள் அதிபராய் இருந்து பணி செய்த பெருமைக்குரிய கல்லூரி. அறிஞர் முத்துவேற்பிள்ளை அவர்களின் சேவையால் முத்திரை பதித்த கல்லூரி.

இவ்வரலாற்றுக் கல்லூரிகளில் படித்து இன்று உயர் நிலையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருப்பவர்கள் ஏராளம். இப்புனிதமான கல்லூரிகளுக்கு திருக்கேதீஸ்வரப் பெருமான் ஆலயத்தில் திருவிழாக்களுண்டு. இக்கல்லூரிகள் நடாத்திய குருபூசைகள், கலை இலக்கிய விழாக்கள் காலங்கடந்தும் பேசப்படுகின்றன. மகாஜனாவிலும், மானிப்பாய் இந்துவிலும் விடுதிச் சாலைகள் இயங்கிய காரணத்தால் பல மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் இக்கல்லூரிகளில் தங்கியிருந்து கற்றுத் தலைநிமிர்ந்த வரலாறு சிறப்புக்குரியது. சைவப் பாரம்பரியத்தில் தோன்றி நூற்றாண்டு விழாப் பொலிவு காணும் இக்கல்லூரிகளை பெருமையோடு சைவ உலகம் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். ஆங்கில ஆதிக்கச் சூழலில் தம் உடமைகளைச் செலவு செய்து ஏழைகளின் கல்விக்காக இப்பெருமக்கள் செய்த தொண்டு மறக்க முடியாதது. இன்றும் தம் வரலாற்றுப் பெருமையை நிலை நாட்டி நிமிர்ந்து நிற்கும் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களைச் சமர்ப்பித்து நூற்றாண்டு காணும் இக்கல்லூரிகள் சூரியன், சந்திரன் நிரந்தரமாக இவ்வுலகில் பிரகாசிப்பதுபோல் என்றும் சிறக்க வாழ்த்திப் பாராட்ட வேண்டியது எம் கடனாகும்.


வயிற்றுக்குச் சோறிட வேண்டும்.
வாழும்மனிதர்க்கெல்லாம் – பயிற்றிப்பல
கல்வி தந்து
பாரை உயர்த்திட வேண்டும். - *பாரதியார்.*

– ஆசிரியர்.

உ
அம்பாள் துணை

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை



# புத்தாண்டு வாழ்த்தும் பிரார்த்தனையும்

## விகிர்தி வருடப் பிறப்பு

## 14-04-2010

**ஓம் துர்க்கா சரணம்**

**அன்புடையீர்,**

வணக்கம், துர்க்காதேவி திருவருள் துணை நிற்க 14-04-2010 புதன்கிழமை புதுவருடம் பிறக்கிறது. புதிய ஆண்டு அனைவருக்கும் இனிய ஆண்டாக அமைய எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம். நீதி நிலைத்திட, அனைவரும் நிம்மதியாக வாழ வழி கேட்டு வேண்டுதல் செய்வோம். அன்பினால், பண்பினால் அறவழியால் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க ஆவல் கொள்வோம். நல்லன நடைபெற நாளும் நற்பணி செய்வோம். இவ்வாண்டும் உங்கள் இல்லங்களில மங்களமும், மகிழ்ச்சியும் நிறைவாகக் கிடைக்க மீண்டும் அம்பாளை வணங்கி எமது இனிய நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பித்துக் கொள்கின்றோம்.

**வணக்கம்**

*நிர்வாகசபை,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

ஆறு. திருமுருகன்
*தலைவர்*

# காலை மாலைப் பிரார்த்தனை

**அம்மா தயாபரி, தாயே, துர்க்கா**
**உன் திருவடிகளே சரணம்**

மந்திர ஜெபமோ, ஆசன முறையோ, நியாசாதிகளோ, எனக்குத் தெரியாது. இது சத்தியம் அம்மா. ஆனால் நான் உன்னைச் சார்ந்து வாழ்கிறேன். எனக்கு வேறு துணை இல்லை. எவ்வளவுதான் பிழைகள் செய்திருந்தாலும் உனக்கே உரிய கருணையினால் என்னைக் காப்பாற்ற வேண்டும். என் உள்ளத்தில் தெளிவை ஏற்படுத்திவை. எனக்கு எஞ்சியுள்ள வாழ்நாள் உன்னை வழிபடுவதில் முற்றாக நிலைக்கட்டும். என்னைப்போல் தவித்துக்கொண்டிருக்கும் ஆயிரம் ஆயிரம் மக்களை கரையேற்றி இரட்சிப்பாயாக. என் தாயே, உன் திருவடிகளே சரணம் சரணம் இக்கலியுகத்தில் துன்பங்களைப் போக்கி மக்களுக்கு அவர்கள் வேண்டும் நலமனைத்தும் அளித்துக் காப்பவள் நீயே தான். உன் புகழ் பற்றி நூல்கள் உறுதி கூறுகின்றன. அதனை நாமும் மேற்கொண்டு வாழ்வும் வளமும், அருளும், பொருளும், அமைதியும், ஆனந்தமும் பெறக் கருணை பாலிப்பாயாக.

அம்மா தாயே!
தாயே துர்க்கா!
உன் திருவடிகளே
சரணம்! சரணம்!! சரணம்!!!

*அன்னை சிவத்தமிழ்ச்செல்வி*
*கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி*

உ

# தேவஸ்தானத்தின் பன்முகப் பணிகள்

- ஆலயத்தில் சிவாகம விதிகளுக்கமைய நித்திய, நைமித்திய, விழாக்கள் நடாத்துவதால் கோயில்கள், கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள், ஆகியவற்றிற்குதேவைக்கேற்ப நிதி உதவி, வசதியற்ற மாணவர்களுக்கான கல்வி உதவி, ஊனமுற்றோர், நோயாளர்களுக்கான நிதி உதவி செய்தல்.
- துர்க்காபுரம் மகளிர் இல்லம்:- ஆதரவற்ற சிறுமிகளை அரவணைத்துப் பராமரிக்கும் நிலையம்.
- அன்னபூரணி மண்டபம்:- இல்லற வைபவம் நடைபெறும் திருமண மண்டபம்
- நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்:- இல்லற வைபவம் நடைபெறும் திருமண மண்டபம், பொது நிகழ்வுகள், அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிலையம்.
- அன்ன சத்திரம்:- அடையா வாயிலாக அடியவர்களுக்கு உணவு வழங்கும் அன்னதான நிலையம்.
- சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம்:- அன்னையர்களுக்கு அபயமளிக்கும் அறநிலையம்.
- சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்:- சைவத் தமிழ் புராண, இதிகாச வரலாற்று நூல்களைக் காக்கும் அறிவாலயம்.
- திருமகள் அழுத்தகம்:- சைவத்தமிழ் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆலயப் பிரசுரங்களைப் பதிப்பிக்கும் நிலையம்.
- துர்க்காதேவி யாத்திரிகர் விடுதி:- யாத்திரைகளுக்கு வரும் அடியவர்கள் தங்கி இளைப்பாறும் இடம்.
- சிவத்தமிழ்ச்செல்வி அன்னை நினைவாலயம்:- மண்ணில் நல்ல வண்ணம் வாழ மனதைப் புனிதப் படுத்தும் தியான மண்டபம்.
- துர்க்காதேவி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை:- வடமாகாணம் சுதேச மருத்துவத் திணைக்களமும், வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களமும் வழங்கும் உதவியுடன் நோயுற்றவர்களுக்கு இலவச சித்த ஆயுர்வேத மருத்துவ சேவை.
- ஸ்ரீ துர்க்காதேவி அறநெறிப்பாடசாலை:- ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் சிறுவர்களுக்கு அறநெறி போதிக்கும் பாடசாலை.

உ

## தேவஸ்தானப் பொறுப்பில் உள்ளோர்

| | | |
|---|---|---|
| அந்தணர்கள் | - | 06 |
| நிதி அலுவலகம் | - | 06 |
| உட்கோயில் பணி | - | 03 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | - | 04 |
| கோயில் பணியாளர்கள் | - | 05 |
| நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் | - | 04 |
| திருமகள் அழுத்தகம் | - | 07 |
| மகளிர் இல்லப் பணியாளர்கள் | - | 06 |
| ஏனைய பணியாளர்கள் | - | 08 |
| மகளிர் இல்லப் பிள்ளைகள் | - | 113 |
| அன்னையர் இல்லம் | - | 12 |

## நடைமுறைக் கணக்குகள் உள்ள வங்கிகள்

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி, சுன்னாகம். | க/கு இல. | 07470940 |
| வர்த்தக வங்கி, சுன்னாகம். | க/கு இல. | C1107000214 |
| வர்த்தகவங்கி, யாழ்ப்பாணம். | க/கு இல. | 1060012692 |
| இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி. | க/கு இல. | 0718488 |
| இலங்கை வங்கி, காங்கேசன்துறை. | க/கு இல. | 07573273 |

**துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி, சுன்னாகம். | க/கு இல. | 07471132 |
| வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம். | க/கு இல. | 1060012977 |
| இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி. | க/கு இல. | 0717043 |

**செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன்**
*தலைவர்*

**திரு. நா. தவநாதன்**
**திரு. மு. அருளையா**
*இணைச்செயலாளர்கள்*

**திரு. அ. சண்முகநாதன்**
*தனாதிகாரி*
**திரு. சு. ஏழூர்நாயகம்**
*உப-தனாதிகாரி*

# சேக்கிழார் வாக்கில் "நீதி"

கவிஞர் வி. கந்தவனம் அவர்கள்

சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் கதைகளை மட்டும் கூறவில்லை. அக்கதைகளினூடாக தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்களது பண்பாட்டு விழுமியங்களையும் சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் சேக்கிழார் விளக்குகின்றார்.

சைவசித்தாந்தத்தின் தளம் தருமம். சிவபெருமான் எப்பொழுதும் தரும தேவதையாகிய விடைமீதிலிருந்தே அடியார்களுக்குக் காட்சி தருவது வழக்கம். தருமத்தின் உயிர் நீதி. சிவபெருமான் தாமாகவும் தமது அடியார்கள் வாயிலாகவும் தருமத்தை நிலை நாட்டக் கடைப்பிடிக்கும் நீதிக்குச் சைவ நீதி என்று பெயர்.

சைவ நீதியில் ஒரு சிறப்பு என்னவென்றால், அது மக்களுக்கு மட்டுமல்லாது எல்லா உயிர்களுக்குமாயிருப்பது. இதனைப் புராணத்தின் தொடக்கத்திலேயே திருவாரூர்த் திருநகரச் சிறப்பிலே வலியுறுத்துகின்றார் சேக்கிழார் பெருமான்.

**பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழர் :**

திருவாரூர் சோழ நாட்டின் நகரங்களுள் ஒன்று. தியாகராசப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் சிறப்புடையது. இந்நகரத்தை தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த மனுநீதிச் சோழன் என்னும் மன்னன் தன் ஆட்சிக்கு உட்பட்ட எல்லா உயிர்களையும் கண் போன்று பாதுகாத்து வந்தான். அவனது அரண்மனை வாயிலிலே ஓர் ஆராயச்சி மணி கட்டப்பட்டிருந்தது. அந்த மணியை அடித்துக் குறை குற்றங்களை மன்னனுக்கு யாராயினும் எந்த நேரத்திலாயினும் தெரிவிக்கலாம் என்ற நிலையிருந்தும் அதனை அடிக்கும் தேவை எவருக்கும் ஏற்படவில்லை. அந்தளவுக்கு நீதி வழுவா நெறிமுறை சார்ந்த ஆட்சியே நாட்டில் நிலவி வந்தது.

ஆயினும் ஒரு நாளும் ஒலிக்காத அந்த மணி ஒருநாள் ஒலித்தது. மன்னன் திகைத்தெழுந்தான். மணியை மக்கள் எவரும் அடிக்கவில்லை. ஒரு பசு அடித்திருக்கிறது நீதி கேட்டு.

பசுவின் கன்று இறந்துவிட்டது. இறப்பிற்குக் காரணம் வேறு யாரும் அல்ல. மன்னின் ஒரே மகன் வீதிவிடங்கனே. விடயத்தை விசாரித்து அறிந்த வித்துவ அமைச்சர் ஒருவர் மன்னனுக்குச் செய்தியை இவ்வாறு விளக்குகின்றார்.

வளவநின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந்தேர்மேல் ஏறி
அளவில் தேர்த் தானை சூழ
அரசுலாந் தெருவில் போங்கால்
இளைய ஆன் கன்று தேர்க்கால்
இடைப்புகுந்து இறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித் தன்மை என்றான்

இவ்விதம் தெரிவிக்கின்ற பொழுது

வீதிவிடங்கனிற் குற்றமில்லை என்கின்ற தொனியில் அமைச்சர் பேசுகின்றார். மேற்படி உனது மைந்தன் தேரிலே தனக் குரிய தெருவிலே சென்றான் அவனுக்குரிய காவற்படையும் அவனைச் சூழ்ந்து சென்றது. அப்பொழுது ஆன்கன் றொன்று வழிமாறி வந்து தேர்ச் சில்லுகளுக்கிடையிற் புகுந்து இறந்து விட்டது. அதனாற் கவலையுற்ற தாய்ப்பசு வந்த மணியை அடித்தது என்கிறார் அமைச்சர்.

இருப்பினும் எல்லா உயிர் களுக்கும் சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல நீதி வழங்கும் மனுநீதிச் சோழன் மற்றோர் அமைச்சரை நோக்கி பசுக் கன்று எந்த வகையில் இறந்ததோ அந்த வகையில் தேர்ச்சில்லால் நெரித்து தன் மகனைக் கொல்லுமாறு கட்டளை யிட்டான். கட்டளையை நிறைவேற்ற மனமில்லாத அந்த அமைச்சர் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறார். அதனை அறிந்த மன்னன் தானே மகன் மீது தேரைச் செலுத்தி முறையிட்ட பசுவுக்கு நீதி வழங்குகின்றான்.

அப்படிச் செய்கின்ற பொழுது குற்றவாளி தனது மகன் என்றோ, தனக்கு ஒரேயொரு மகனே உள்ளான் என்றோ மன்னன் கருதவில்லை. பந்தபாசத்திற்கு இடமளிக்கவில்லை. முறை செய்து காப்பாற்றும் மன்னவனின் திறத்தை சேக்கிழார் இவ்விதம் வியந்துரைக்கிறார்.

ஒருமைந்தன் தன் குலத்திற்கு உள்ளான்
என்பதும் உணரான்
தருமந்தன் வழிச்செய்கை கடன் என்று
தன்மைந்தன்
மருமந்தன் தேர் ஆழி உற ஊர்ந்தான்
மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற்(று) எளிதோதான்

இவ்விதம் நீதியோடு நாயன்மார்களின் வரலாறுகளைச் சொல்லத் தொடங்கும் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் களாக விளங்கிய பிற மன்னர்களின் நீதி வழுவா நெறிமுறைகளையும் ஆங்காங்கு விபரிக்கின்றார்.

**பகைவனுக்கு அருளிய மெய்ப்பொருள் நாயனார் :**

மெய்ப்பொருள் நாயனார் சேதி நன்னாட்டு வேந்தர் பெருமான். மேற்படி அரசியல் நெறியில் வந்த அற நெறி வழாமல் குடிகளைக் காத்தவர். அடியவர் திருவேடத்தையே மெய்ப் பொருள் எனக் கொண்டு சிவ தொண்டு புரிந்தவர். அவரை எதிர்த்து நின்று வெல்ல முடியாத முத்தநாதன் என்ற பகையரசன் பொய்யாகச் சிவனடியார் வேடம் தாங்கிக் கொல்கின்றான். அது கண்ட மெய்க் காப்பாளன் தத்தன் முத்த நாதனைக் கொல்லச் செல்கின்றான். அப்பொழுது குற்றுயிராய்க்கிடந்த மன்னன், "தத்தா அவர் நம்மவர். ஒன்றுஞ் செய்யாதே!" என்று தடுக் கின்றார். அத்துடன் அவர் நின்று விடவில்லை. நாட்டின் எல்லை வரை முத்தநாதனைப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று விடவேண்டுமென்று பணிக்கின்றார். தத்தனும் அவ்விதமே செய்து மீண்டும் வந்து பகைவனைப் பாகாப்பாக அனுப்பிய விபரத்தை குற்றுயிராய்க்கிடந்த மன்னனுக்குத் தெரிவிக்கின்றான். அந்த நல்ல செய்தியைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் தத்தனைப் பாராட்டி சிவனது திருவடி களைச் சிந்தை செய்து உயிர் துறக்கின்றார்.

**குற்றஞ் செய்த குடிமகனைக் கும்பிட்ட கோமான் :**

மற்றுமொரு நிகழ்வு கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த புகழ்ச்சோழநாயனார் காலத்தில் நடந்தது. நீராடிய பின் வீதி வழி வந்துகொண்டிருந்த அவரது பட்டத்து யானை சிவகாமியாண்டார் என்ற தொண்டர் கோயிலுக்குக் கொண்டு சென்ற பூக்கூடையைத் தட்டி விழுத்தி விடுகின்றது. சிவபெருமானே! எனது வழிபாட்டுக்குக் கொண்டு வந்த மலர்களை இந்த யானை சிந்தலாமா? என்று ஓலமிட்டு முறையிடுகின்றார் தொண்டர். அவரது ஓலம் அடியவர்களின் ஆபத்திற்கு உதவும் எறிபத்தர் செவிகளில் ஏறுகின்றது. எறிபத்தர் சிவப்பணிக்கு இடையூறு விளைத்த யானையையும் எதிர்த்த பாகர்களையும் தனது மழுப்படையாற் கொன்றுவிடுகிறார்.

செய்தியை அறிந்த புகழ்ச்சோழ நாயனார் சினங்கொண்டு சேனைகளுடன் யானை கொல்லப்பட்ட இடத்தை அடைகின்றார். அங்கே மழுவேந்தி நிற்கும் எறிபத்தர் தான் யானையையும் பாகர்களையும் கொன்றார் என்பதை அறிந்து மன்னரின் கோபம் தணிகிறது.

எறிபத்தர் சிவபத்தர் யானை ஏதோ பிழை செய்திருக்கவேண்டும். அதனாலேதான் அவர் அதனைக் கொன்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்.

"தேவரீருக்கு யானை செய்த தீங்கை அறியேன்" என்கிறார். எறிபத்தர் நடந்ததைக் கூறுகின்றார். அதனைக் கேட்ட புகழ்ச்சோழர் இறைவனுக்கும் அவன் அடியாருக்கும் இளைத்த குற்றத்திற்கு தாங்கள் அளித்த தண்டனை போதாது. எனது ஆட்சியில் நடந்த குற்றத்துக்கு நானும் உடந்தை யாவேன். என்னையும் தாங்கள் கொல்ல வேண்டும் என்று கூறித் தனது உடை வாளைக் கொடுக்கின்றார்.

வெந்தழல் சுடர் வாள் நீட்டும்
வேந்தனை நோக்கிக் கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்(கு)
அளவின்மை கண்டேன் என்று
தந்தவாள் வாங்க மாட்டார்
தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற் றஞ்சி
வாங்கினார் தீங்கு தீர்ப்பார்.

வாளை வாங்காது போனால் மன்னன் தன்னையே அந்த வாளால் கொல்லக் கூடும் என்று அஞ்சிய எறிபத்தர் வாளை வாங்குகின்றார். பின்னர் இத்தகைய சிவபக்தருக்கா தீங்கு செய்தேன் என்று வருந்தி அவ்வாளால் அவர் தன்னை அறுக்க முயன்றபோது மன்னர் அவர் கையைத் தடுக்கின்றார். அவ்வளவில் சிவபெருமான் திருவருளால் இறந்தவர் யாவரும் எழுகின்றனர்.

**பண்டாரத் திருடரைக் கொண்டாடிய பண்பாளர் :**

குடிமகன் ஒருவன் செய்த குற்றத்தைக் குணமாகக் கொள்ளும் நீதிக்கு மற்றுமோர் உதாரணம் இடங்கழிநாயனார் ஆட்சியில் இடம் பெற்றிருக் கின்றது.

இடங்கழி நாயனார் கோனாடு என்னும் வள நாட்டை ஆண்டு வரும் காலத்தில் சிவனடியார்களுக்குத் திருவமுது வழங்குவதை நியமமாகக் கொண்ட தொண்டர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒருமுறை அமுது

செய்வதற்குரிய பொருட்கள் எங்குங் கிடைக்கவில்லை. வேறு வழியில்லாது அந்நாட்டு மன்னர் இடங்கழியாரது களஞ்சிய அறையில் இரவிற் புகுந்து நெல்லைத் திருடினார். காவற்காரர் அவரைப்பிடித்து அரசன் முன் நிறுத்தினர். விசாரித்தபோது "சிவடியார்களுக்கு உணவளிக்கும் எனது பணி முட்டுப் பட்டமையாலே இவ்வாறு செய்ய நேர்ந்தது" என்றார். அதனைக் கேட்ட இடங்கழிநாயனார் "இவரன்றோ எனக்குப்பண்டாரமாவார்" எனவுருகி அடியவரை விடுதலை செய்ததோடன்றி "எல்லாப் பண்டாரங் களிலிருந்தும் வேண்டியவற்றை மக்கள் எடுத்துக் கொள்ளலாம்" என்று கட்டளையும் பிறப்பித்தார்.

**சைவத்திற் சாதிபேதம் கிடையாது :**

இவ்விதமாகத் திருத்தொண்டர் புராணத்தில் சைவநெறி நின்ற அரசர்களின் நீதி வழுவா நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் சேக்கிழார் பெருமான் சமூக நீதியையும் தெளிவு படுத்தத் தவறவில்லை. அவர் நிலை நாட்ட முனையும் சமூக நீதிகளுள் மிகவும் முக்கியமானது சைவத்தில் சாதிபேதம் இல்லை என்பது.

ஆதித் தமிழகத்திற் சாதிப் பிரிவுகள் இருக்கவில்லை. ஆரியர் வருகையால் தமிழர் மத்தியில் அவை படிப்படியாக வளர்ந்து நாயன்மார் காலத்தில் பொது வழக்காகி இருந்தன. எனினும் நாயன்மார்கள் சாதி வேறு பாடுகளுக்கு அடிமையாக வில்லை. அவர்கள் வெவ்வேறு குலத்தவராயினும் எல்லோரும் எல்லாரையும் சமனாகவே மதித்து நடந்தனர். ஒரு நல்ல உதாரணம் திருஞானசம்பந்தர் - திருநீலகண்ட யாழ்ப்பாணர் உறவு.

திருஞானசம்பந்தர் அந்தண குலத்தவர். யாழ்ப்பாணர் பிறப்பால் தீண்டத்தகாதவர் என்று கருதப்பட்டவர். முதற் சந்திப்பிலேயே சம்பந்தர்,

அளவிலா மகிழ்ச்சியினார்
தமை நோக்கி "ஐயர் நீர்
உளம் மகிழ இங்கணைந்த
உறுதியுடையோம்" என்றே.

மிகுந்த மதிப்போடு யாழ்ப்பாணரை வரவேற்கிறார்.

பின்னரும் யாழ்ப்பாணரை விழிக்கின்ற போதெல்லாம் "ஐயரே" என்று மதிப்பாக அழைப்பதே சம்பந்தரின் வழக்கம் என்றும், சேக்கிழார் கூறுகின்றார்.

சொல்லளவிலன்றிச் செயலளவிலும் சம்பந்தர் தமது சமரச மனப்பான்மையை நடைமுறைப்படுத்தியிருக்கின்றார். தமது பாடல்களுக்கு இசை அமைக்கும் பொறுப்பை யாழ்ப்பாணருக்கு வழங்கித் தாம் செல்லுமி டமெல்லாம் யாழ்ப்பாணரையும் அவரது துணைவியாரையும் அழைத்துச் செல்கின்றார். கோயில்களுக்குள் அவர்கள் சம்பந்தருடன் சென்று வந்ததை மற்றைய அந்தணர்களும் ஏற்றுக் கொண்டனர் என்பதையுங் கவனித்தல் வேண்டும்.

மேலும் திருநாளைப் போவாரை தில்லை வாழ் அந்தணரும் "ஐயர்" என்று அழைத்தனர் எனக் கூறிச் சைவ சமூகத்தில் தாழ்ச்சி உயர்ச்சி பார்க்கலாகாது என்ற உன்னத கருத்தை சேக்கிழார் பெருமான் வலியுறுத்துவதைப் பார்க்கின்றோம்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருமணம் மிகவும் புரட்சிகரமானது. சிவவேதியர் குலத்திலே அவதரித்த அவர்

முதலிலே மணந்து கொண்டது பரத்தையர் குலத்துப் பரவையாரை. பின்னர் திருமணம் செய்தது வேளாளர் குலத்திலே பிறந்த சங்கிலியாரை.

திருத்தொண்டர்கள் "பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்; "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்". அவர்கள் போலிகளை எதிர்த்தவர்கள். உண்மையை நிலைநாட்டப் போராடிய வர்கள். மக்களை மதித்தவர்கள். சமுதாய ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்தவர்கள்.

அவர்கள் வாழ்க்கையிற் கடைப் பிடித்த நீதிக்குப் புராணத்தில் முதன்மை இடம் தருகின்றார் சேக்கிழார் பெருமான். அவரது வாக்கால் நாம் அறியக் கிடக்கும் நீதியே சைவநீதி. சைவநீதியை 'மேன்மைகொள் சைவநீதி' என்று போற்றுகிறார் கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார்.

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்.

மேன்மைகொள் சைவநீதியைப் பேணித் தருமத்தை வளர்த்துப் பிறந்த பயனைப் பெற்று உய்வோமாக.

## உண்மை தெரியும்

தீயில் கரையும் உடல்
நீரில் கரையும் அஸ்தி
தமிழில் கரையும் உள்ளம்
தளைகளறுத்திடும் சைவம்

இளமை தந்திடும் கனவு
இயற்கை தந்ததன் உணர்வு
அளியாதிருப்பது அறிவு
மொழியென்பது ஊடகம்

மறை யென்பது வேதம் - பல
பிறைகள் காண்பது வயசு
இறையுண்டென்று நம்பு
இல்லையென்றால் அது இல்லை

மனசில் இருப்பது பிரம்மம் - அது
மறைந்துவிட்டால் ஆணவம்
உடல்கள் தளரும் போதே
அதன் உண்மை தெரியும்

இ. பஞ்சாமிர்தபாலன்

# சைவ நெறிகளை அநுசரித்து வாழ்வோமாக

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

நாம் ஒவ்வொரு காரியத்தையும் செய்யும்போது இறைவனை நினைந்து, எடுத்த காரியம் எண்ணியபடி நிறை வேற வேண்டும் என வேண்டுதல் செய்து, அக்காரியத்தை ஆற்றுவது எமது சமய மரபு. இறைவனை முன் வைத்துச் செய்யப்படும் எந்தக் கருமமும் நிச்சயம் நல்லபடி கைகூடும். இறைவனைச் சிந்தித்து கருமங்களை ஆற்றும்போது நல்ல வழிகளைக் கையாளுவோமே தவிர தீய வழிகளை நினைத்தும் பார்க்க மாட்டோம். இறைவன்மீது நமக்குப் பக்தி இருப்பதனால்; உதவுவான் என்னும் நம்பிக்கை இருப்பதனால்; நம்முடைய ஒவ்வொரு செயலையும், ஏன் சிந்தனையையும் சதா, இறைவன் கண்காணித்துக்கொண்டிருப்பதால்; இறைவனுக்குப் பிடிக்காதவற்றை செய்ய நாம் துணிவதில்லை. அவ்வாறு கடவுளுக்கு விரோதமாக ஏதாவது செய்தால் நாம் என்றோ ஒருநாள் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும் என்ற கோட்பாட்டில் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் பயனே, தீய செயல்களில் ஈடுபாடு கொள்ளாமல் இருத்தலாகும். இந்த வகையில் இறை சிந்னை, இறை பக்தி, இறை நம்பிக்கை என்பவற்றைக் கொண்டிருப்பவர்கள் பாவங்களைச் செய்ய அஞ்சுகின்றனர்.

"அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்று அறுக்கும்" என்பார்கள். குற்றங்களைக் கண்டு ஆராய்ந்து குற்றவாளிக்கு உடனுக்குடன் தண்டனை வழங்குபவன் அரசன். அதனால் குற்றச் செயல்களைக் குறைக்க முடிகிறது. சில சமயங்களில் ஏதாவது காரணங்களினால் குற்றவாளிகளுக்கு உடன் தண்டனை கிடைக்காமலும் போகலாம். ஆனால் தெய்வ தண்டனைக்கு எவருமே தப்பிவிட முடியாது. எவருடைய தனிப்பட்ட செல்வாக்கும், தவறான வழியில், தெய்வத்தின் சந்நிதியில் ஈடுபடாது என்பது உண்மை. தெய்வ நீதி என்றும் சரிந்தது இல்லை சரியப் போவதும் இல்லை. தெய்வத்திற்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதம் இல்லை. தெய்வத்தின் முன் எல்லோரும் சமம். தெய்வம்தான் நீதி; நீதிதான் தெய்வம். எனவே நீதியின் முன் எல்லோரும் சமம் என்று கொள்வதே சைவநீதி. அதனால் சைவநீதி மேன்மையாகப் போற்றப் படுகின்றது. சைவநீதியைப் பேணுபவர்கள், வாழ்க்கையில் பின்பற்றுபவர்கள்எவரோ அவர்கள்தான்சைவர்கள். சைவர்கள் என்போர் நீதி மான்கள். நீதிமான்களாக விளங்காத சைவர்கள் உண்மையில் சைவர்கள் அல்லர். அவர்கள் அசைவர்கள். அதாவது போலிச் சைவர்கள். வேடதாரிகள்சைவத்தைப்பிறர் பழிப்பதற்கு உடந்தையாக இருப்பவர்கள்.

சிலர் சைவ வேடங்கள், சைவ சின்னங்கள் என்பவற்றைப் புறத்தே தாங்கிக் கொண்டு சைவநீதிக்குப் புறம்பாகக் கூடாவொழுக்கங்களில் ஈடுபடுகின்றனர். இத்தகைய தீயவர்களால் சைவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தப் படுகிறது. இதனைச் சைவர்கள் அனுமதிக்கக் கூடாது.

சினிமாக்களிலும், நாடகங்களிலும் வில்லன் பாத்திரங்கள் தாங்கி நடிப்பவர்கள் அனேக சந்தர்ப்பங்களில், விபூதி, உருத்திராக்கம் மற்றும் சிவ சின்னங்கள் என்பவற்றை அணியப் பெற்றவர்களாகக் காட்சி தருகின்றனர். சந்நியாசி வேடங்களில் கபடதாரிகள் சித்திரிக்கப்படுகின்றனர். ஆக, சிவ சின்னங்கள், சிவ வேடங்கள் என்பவற்றிற்கும் கபடம், வஞ்சகம், சூது, சூழ்ச்சி, சதிவேலைகள் என்பவற்றிற்கும் தொடர்பு உள்ளதாக மக்களை நம்பும்படி செய்யும் ஒரு முயற்சியாகவே இதனைக் கொள்ள வேண்டியுள்ளது. கதையை இரசிக்கலாம்; காட்சியைச் சுவைக்கலாம். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால் இவற்றிற்குப் பின்னால் சைவமும், சிவசின்னங்களும் கொச்சைப்படுத்தப்படுவதையும் கேவல நிலைக்குத் தள்ளப்படுவதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். சைவர்களாலேயே பெரும்பாலும் சைவம் இவ்வாறு மாசுபடுத்தப்படும் போது, சைவநெறி நிற்போர் வேதனை அடையாமல் இருக்க முடியாது. சிவ சின்னங்களும், சிவ வேடங்களும் நிஜத்திலும் சரி, கற்பனையிலும் சரி வில்லன்களினதும் கபடதாரிகளினதும் அம்சங்களாகவும், வேடங்களாகவும் அமைந்துவிடாது பார்த்துக்கொள்ள வேண்டியது சைவ மக்களின் கடமையாகும். அதற்குச் சைவர்கள் முன் உதாரணங்களாக விளங்க வேண்டும்.

சைவநெறி நிற்போர், சைவக் கோலத்தில் மறைந்துகொண்டு தீய செயல்களை செய்யாதிருத்தல் மிக அவசியம். சிவ சின்னங்களை துர்ப்பிரயோகம் செய்தல் ஆகாது. மறைந்தொழுகும் மாந்தர்களாகச் சைவ மக்கள் இரட்டை வாழ்வு வாழ்வதைத் தவிர்த்துக்கொள்ளுதல் அவசியம். கூடாவொழுக்கம் புரிந்துகொண்டு திருக்கோயில் செல்வதினாலோ, பெருந்தொகைப் பணத்தை அங்கு செலவு செய்வதினாலோ, தீர்த்த யாத்திரைகள் மேற்கொள்வதினாலோ பாவங்களைத் தீர்த்துவிடலாம் என எண்ணுவது அறிவுடைமையாகாது. இரும்பைத் தின்றுவிட்டு இஞ்சித் தண்ணீரைக் குடித்தால், இரும்பு சமிபாடு ஆகப்போவதில்லை.

சைவர்கள் எப்பொழுதும் சைவ நெறிப்படி சைவ நீதியை அனுசரித்து வாழ வேண்டும். அதற்கு இறையுணர்வோடு, இறை பக்தியோடு, இறை நம்பிக்கையோடு கருமம் ஆற்றுதல் அவசியமாகின்றது. இறைவனோடு வாழ்கின்றோம் என்ற உணர்வு ஏற்படும் பட்சத்தில் எம்முடைய ஒவ்வொரு சிந்தனையும், பேச்சும், செயலும் நல்லதாகவே அமையும் என்பது உறுதி.

# அவைபட்டினி நாளே

பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள்

எதை உண்போம் எதைக் குடிப்போம் என்று எந்த உயிரினமும் சிந்தித்தது இல்லை. மனித உயிர்தான் பட்டினியால் வாடியிறக்கிறது. பசி, பிணி, மூப்பு, சாக்காடு எம்மோடு உடன் பிறந்தவை. கொடிது கொடிது வறுமை கொடிது என்றாள் அந்நாள் அவ்வை. இன்றைய புரட்சிப் புலவனோ பிறர் உண்ட பின் நீ உண். பிறர் உடுக்க நீ உடு என்று பாட்டெழுதினார். இன்று நடைமுறையில் வருமா? உணவு உண்டாற் பசி போகும். பசியாறின் உயிர்த் துடிப்பு அகலும் எனவே வயிற்றுக்குச் சோறிட வேண்டுமென்றான் புதுமைப் புலவன்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

பாரதி கவிதைகள் முரசு 30.

வாழைப் பழக்கடை வைத்தேனும் பிறர் பணி செய்வோம். பாரதிக்கு முன்னே வந்த குறளாசான் என்ன சொன்னான்.

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்

குறளோவியம் 1062

இம்மாநிலத்திலே பசி தீர்க்க இரு கரங்களை நீட்டி அம்மா பசிக்கிறது அப்பா பசிக்கிறது என இவ்வுலகில் யாரேனும் பசிக்காகப் பிச்சை கேட்க வைத்த இவ்வுலகைப் படைத்த அந்தக் கொடிய படைப்பாளி இலனாகட்டும் என ஒரு சாபம் போட்டான் வள்ளுவன் அதேயே மாறிப்போட்டார் பாரதி.

இனியொரு விதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்
தனி யொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

தேசிய கீதங்கள் பாரத சமுதாயம் 2

ஒரு தனிநபர் (Single Man) கூடப் பட்டினியாற் பரிதவித்து, துடிதுடித்து இறத்தல் கூடாது. என்ற சித்தாந்தம் என்னவாயிற்று. உலகெங்கணும் பட்டினி போட்டு மானிடத்தை அழிக்கிறதே. இதற்கோர் புதிய விதி அமைப்பது எப்படி. மனிதர் நோக மனிதர் வாழ்வதா? ஒரு கூதிக்கும் வழியின்றி வெறிதே வாழ்ந்து மடியும் இம்மானிட வாழ்வும் ஒரு வாழ்வா? இப்படியும் வாழ வேண்டுமா?

தேடிச் சோறு நிதம் தின்று – பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்வாடப்
பல செயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவமெய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போலவே – நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

32 யோகசித்தி 4

"அள்ளி உண்ணும் சோற்றுக்காக அருமை கெடலாகாதப்பா" எனக் கவிமணி பாட்டிசைத்தார். ஆண்டியென்ன அரசனென்னன பசியாத மனிசரில்லை. பசி யாவர்க்கும் பொது, பட்டினி சிலரக்குச் சிறப்பு. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. பசு மாட்டிற்குத் தண்ணீர் தாருங்களென இரக்காதே என்பது வள்ளுவன் கூற்று. அப்படியாயின் என்ன செய்யலாம். வாளியை எடுத்துக் கிணற்றிலேயள்ளி வை என்பதுதான் இதற்குப் பொருள். பாரெல்லாம் பொய்யெனவே துறந்த பட்டினத்தாரைப் பசி துரத்தியது. அந்தப்பட்டறிவை உற்றறிவை ஏட்டிலே எழுதி வைத்தார்.

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத்தானல்ல பூமி தனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற்காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக்கல்ல வென் சிந்தை கெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே

தல வரிசை 90

பொரை:

தரித்துக் கொள்ளும் ஆபரணங்களுக்கு ஆகவல்ல; பொருளைக்குறித்து அல்ல; நிலங்களைக் கொள்ளும் பொருட்டல்ல; பெண்கள் நிமித்தம் அல்ல அழகிய பொருள்களைக் கண்டு களிப்பதற்கல்ல (களிப்பு - மகிழ்ச்சி) ஆகாயம் கடந்து விளங்குஞ் சிவபெருமான் திருவடிக்கல்ல, என் மனமழிந்து ஒருசாண் வயிற்றை வளர்க்க அடியேன் படும் துன்பம் கொஞ்சமன்று.

பட்டினத்தடிகள் கொங்கு நாட்டில் இருந்தபோது ஒரு தினம் ஒருவன் வீட்டை அடைந்துபிச்சை கேட்ட காலத்து அவ்வீட்டுக்காரன் சுவாமிகளைக் கள்வன் என்று கருதிப் புடைத்தனன். அதைக் கண்ட எதிர் வீட்டுக்காரன் சுவாமிகளை அழைத்துச் சென்று உபசரித்து அன்னமிட்டான். அதுகாலை அடிகள் பாடிய பாட்டு இஃது என்று கூறுவர். இச்செய்யுளால் பசியின் கொடுமை குறித்தவாறாம். "மானங்குலங் கல்வி வண்மை, அறிவுடமை, தானந் தவ முயற்சி தாளாண்மை, - தேனின் கசிவந்த சொல்மெல்லியர் மேல் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்து போம்" ஔவையார். பசி சிவயோகிகளையும் விட்டகலாது.

சிவயோகம் முதிரப் பெற்று அமிர்ததாரை உணவாமளவும் பசிநோய் யோகிகளையும் வருத்தியே தீரும். எப்பற்றுமின்றி யோகத்தில் தலைப்பட்ட அன்பர்கள் பசியை ஆற்ற வேண்டியது இல்லறத்தார் கடன்.

பட்டினத்தார் படல் விருத்தியுரை திருவித (1924)

பாணர்கள் பசி தீர்க்க வள்ளல்களைத் தேடி அலைவர். பசியையும் பிணியாய்க் கருதிய காலமொன்றிருந்தது. இதைப் பாணாற்றுப் படையில் "பசிப்பிணி மருத்துவர் இல்லம் அணித்தோ சேய்த்தோ" எனக் குறிப்பிடப்படுகின்றது. பசி இயற்கை அந்நேரம் உணவு உண்ணாவிடின் ஆத்மா துடிக்கும். இவ்வாத்துமத்துடிப்புப் பொல்லாதது. பசிக்கு உணவின்றி நீண்ட நாள் கிடப்பதே பட்டினி. இந்த உணவு அவ்வெவ்வேளை தேவை. ஏற்கனவே சாப்பிட்டு வைக்க முடியாது. ஒட்டகம் தன் திமிலிலே நீரைச் சேகரித்து வைத்துப் பயன்படுத்தும். மனிதப்பிறப்பு அப்படியானதன்று. இதைத் தமிழ்ப்பாட்டி எடுத்துக் கூறுமாறு, இஃது.

ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
இருநாளுக் கேல் என்றால் ஏலாய்– ஒருநாளும்
என்நோ அறியாய் இடும் பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது

நல்வழி

இந்த மனித வாழ்வில் பட்டினி பொல்லாதது. அற்றார் அழி பசி தீரத்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி என்பது குறள் வாக்கு. காந்தி உண்ணா நோன்பைக் கைக் கொண்டார். அப்பரும் பசியிருந்து மறைந்த ஆலயத்தை வெளிக்கொணர்ந்தார். எல்லாச் சமயத்திலும் நோன்பு மேற்கொள்வது இயல்பு. முஸ்லீம்கள் நாற்பது நாள் விரதம் (நோன்பு) மேற்கொள்வர். கிறீஸ்தவர் ஈஸ்ரர் காலத்தில் விரத நோற்பர். பௌத்தரும் "சில்" மேற் கொள்வர். நம் சமயத்திலும் கந்த சஷ்டி விரதிகள் மிளகும், தண்ணீரும் அருந்தி விரதம் அனுட்டிப்பர். இதனாற் பெரு நன்மைகளைப் பெறுவர். குழந்தைச் செல்வம் பெற்றிருக்கிறார்கள். நோயிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள். கல்வியால் மேம்பட்டிருக்கிறார்கள். நினைத்த காரியம் சித்தியாய் இருக்கிறது.

மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் மனதை விதிப்படி மெய்யன்போடு விஷேஷமாக வழிபடுதல். (சைவ வினாவிடை விரதவியல் நாவலர் 408) விரதம் அனுட்டிப்பவர். அவ்விரத தினத்தில் எவ்வெவைகளை நீக்கி எவ்வெவைகளைச் சேர்த்தல் வேண்டும்?

"காமம், கோபம் முதலிய குற்றங்கள் எல்லாவற்றையும் பற்றுக்களைதல் வேண்டும். தவறாது வைகறையிலே நித்திரை விட்டு எழுதல் வேண்டும். புண்ணிய

தீர்த்தத்தை அடைந்து வீபூதி, வில்வத்தடி மண், தருப்பை, கோமயம், திலம் என்பவைகளை சிரசிலே வைத்து கையிலே பவித்திரஞ் சேர்த்துச் சங்கற்பம் சொல்லி ஸ்நானம் செய்தல் வேண்டும். தியானஞ், செபம், பூசை, ஆலய தரிசனம், பிரதட்சணம், புராண சிரவணம் முதலியன விஷேசமாகச் செய்தல் வேண்டும். திருக்கோயிலிலே இயன்ற மட்டும் நெய் விளக்கு ஏற்ற வேண்டும். அபிஷேகத் திரவியம் நைவேத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும்.

போசனம் பண்ணுமிடத்துச் சிவனடியார் ஒருவரோடாயினும் போசனம் பண்ணல் வேண்டும். நித்திரை செய்யுமிடத்து இரவிலே கோமயத்தினாலே மெழுகப்பட்ட தரையிலே தருப்பையின் மேலே கடவுளைச் சிந்தித்துக் கொண்டு அதிசித்தராய் நித்திரை செய்து வைகறையில் எழுந்துவிடல் வேண்டும். உபவாசத்தினத்திற்கு மற்றைநாட் காலையிலே நித்திய கருமம் இரண்டும் முடித்துக் கொண்டு மகேசுர பூசை செய்து, ஆறு நாளிகையுள்ளே சுற்றத்தாரோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணிய பின் பகலிலே நித்திரை செய்யாது சிவபுராணங்களைக் கேட்டுக்கொண்டிருத்தல் வேண்டும்; நித்திரை செய்தவர் சற்பிராமணரைக் காரணமின்றிக் கொன்ற மகாபாதகத்தை அடைவர் (பாரணம் - உபவாசத்திற்குப் பின் செய்யும் போசனம்).

சைவ வினாவிடை 1ஆம், 2ஆம் பாகம்
பக்கம் 100–101
வெளியீடு :ஸ்ரீ லங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

உடல் கூற்று வல்லுனர்கள் உடலைப் பாதிக்கும் நோய்களையும் மருந்துகளையும் புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கிறார்கள். இக்கொடிய நோய்களால் தீராத பிணிகளால் மக்கட் கூட்டம் அனுபவிக்கும் அல்லல் எழுத்தில் அடங்கா இவ்வண்ணமே மானிட உயிர்க்கு ஒரு நோய் உண்டு. அதைப் பிறவிப் பிணி என்பர். இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது பிறவியை அறுப்பதற்கே. இரத்தின கசிதமாய்ச் சொன்னால் பிறவியறுக்க வந்ததே மானிட ஜன்மம் வள்ளுவர் இதை நுணுக்கமாகச் சொல்லுகிறார்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

குறளோவியம் – 10

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு"

மேலது 352

"செம்பொருள் – இறைவன் சிவன்"

பசியைப் பிணியாக உருவகம் செய்ததுபோலப் பிறவியையும் பிணியாக உருவகம் செய்துள்ளனர். இப்பிறவியினின்றும் விடுதலை பெறப் புனிதமான தூய வாழ்வை நாம் மேற்கொள்ள வேண்டும். பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பது வள்ளலார் வழி. இறைவனைக் காண வேண்டும். அவனோடு இரண்டறக் கலந்து ஆனந்தம் அடைய வேண்டும். சிற்றின்பங்களைத் துறந்து பேரின்பம் காண வேண்டும். இந்த தீராத நோயைத் தீர்த்தருள வல்லவன் இறைவனே என்பர் நாவேந்தர். தீராத நோய் தீர்த்தருள வல்லான் தன்னை என்பது அப்பர் கூற்று. பசித்திருப்பது போலத் தனித்திருக்க வேண்டும் எம் மனத்துளே புகுந்திருக்கும் கொடிய அரக்கர்களை வெளியேற்ற வேண்டும். புதிய அரக்கர்களை உள்ளே புக விடவும் வேண்டாம். இதையே கலகத்தரக்கர் என்றான் பாரதி. இவற்றோடு விழித்திருக்கவும் வேண்டும். ஏகாதசி விரதம், சிவராத்திரி விரதங்களை நித்திரை செய்யாமலே அனுட்டிக்கிறோம். எல்லாம்வல்ல பரம்பெருள் எப்படி வருவான், எப்போ வருவான் என்னவடிவில் வருவானென யாருக்குமே தெரியாது. எனவே இறைவனைக் காணவேண்டும் என்ற விழிப்புணர்வு முக்கியமாம். இந்த இறை நாட்டத்திலே அதியுத்தமம் ஆனது இறை நாமங்களை உச்சரித்தல், சிவநாம செபம், முருக நாம செபம், திருமால் நாம செபம் மிகவும் சிறந்த பாதையாகும். நால்வர் உள்ளிட்ட பலரும் நமச்சிவாயப் பதிகம் பாடினர். சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை என்பது அவ்வை வாக்கு. யானேயோ தவம் செய்தேன் சிவாயநம என்றிடப் பெற்றேன் என்பர் மணிமொழியார். திருமந்திரம் வெகு அடக்கமாகப் பாடி வைத்திருக்கிறது.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே.

**மந்திரம் 2717**

அருணகிரியார் மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்களென்றார். இவ்வாறே ஆறெழுத்து மந்திரமும் உன்னதமானது. அருட்பிரகாச வள்ளலார் தூல பஞ்சாட்சர பெருமையை பழகு தமிழிலே பாடினார்.

பெற்ற தாய் தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தேஎங்கும்
நமச் சிவாயத்தை நான்மறவேனே

**நமச்சிவாய மாலை 12 அருட்பா.**

இவ்வண்ணமே (இ)ராம நாமத்தின் மகத்துவத்தைக் கம்பர் வாலி வாக்கில் இருந்து பேசுகின்றார்.

மும்மை சால் உலகுக் கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தை தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை 'இராமன்' என்னும்
செம்மை சேர் நாமந்தன்னை, கண்களின் தெரியக் கண்டான்

கிட்கிந்தா காண்டம் வாலி வதைப்படலம் 79

ராம நாமத்தை மூல மந்திரம் என்றார் கம்பநாட்டாழ்வார். பன்னிரு ஆழ்வார்களில் பெரியாழ்வார், குலசேகரம் பெருமாள், திருமங்கை மன்னன் எட்டெழுத்து மந்திரத்திரத்தின் ஏற்றத்தைப் பாடியுள்ளனர். இன்று உலகெங்கும் ஹரே கிருஷ்ணா, ஹரே ராமா, ஸ்ரீராம் ஜெய ராம், ஜெய ஜெய ராம் என்ற மந்திரங்கள் ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. இந்த நெறியிலே பெரியாழ்வாரின் சிந்தனையில் உருவான பாசுரம் இது.

கண்ணா! நான்முக னைப்படைத்தானே!
காரணா! கரியாய்! அடியேன் நான்
உண்ணா நாள்பசி யாவதொன் றில்லை
ஓ வாதே! நமோ நாரணா! என்று
எண்ணா நாளும் இருக் கெசுக் சாம
வேத நாண் மலர் கொண்டுன பாதம்
நண்ணா நாள் அவை தத்துறு மாகில்
அன்றெ னக்கவை பட்டினிநாளே

பெரியாழ்வார் திருமொழி 5:1:6

நான்முகன்- பிரம்மா, ஓவாது- இடைவிடாது, ஓயாது இருக்கு- இருக்குவேதம் எசு- யசுர்வேதம், சாம- சாமவேதம், நான்மலர்- அன்றலர்ந்த, தத்துவம்- சேருமாகில், புதிய மலர். நண்ணுதல்- அடைதல், நண்ணாநாள்- சேரா நாள்.

இப்பாடலிலே நின் திருவடிகளை நினைக்காத நாள் எனக்குப் பட்டினி நாளேயென விஷ்ணு சித்தர் சொல்லிய நுண்பொருளை ஒவ்வொரு சைவ சமயிகளும் சிந்திப்போமாக.

# பரமயோகியினிடத்தில் பட்டினத்தடிகள் பரிந்துரை

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

"................... என்னையும்
இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்
கடற்ப டாவகை காத்தல் நின் கடனே"

இந்தப் பூவுலகத்தில் வாழும் மானுடர் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கடமைகளைக் கருத்திருத்தி வாழ்க்கையை நடாத்தத் தலைப்படு வார்களேயானால் மண்ணுலக வாழ்க்கை மகிழ்ச்சி தரும். விண்ணுலக இன்பத்தையும் வென்று விடும் என்று சொல்வது மிகையாகாது.

தாமாகவே அனாவசியமான பிரச்சினை களைக் குடும்பங்களில் உருவாக்கி விட்டுச் சிலர் சிரிப்பார்கள். பின்னர் உள்வீட்டுப் பூசல்களை ஒழிப்பதற்காகக் காலத்தைச்செலவிடுவதனால்பொன்னான நேரம் மண்ணாகின்றது. மன உளைச்சல் உறுதியோடு தன் கடமையில் ஈடுபட முடியாத புலன் அலைச்சலுக்கு ஆளா கின்றார்கள்.

இதனால் ஒருவர் தான் கடமை யிலிருந்து நழுவி விடுவதோடு மற்ற வருடைய கடமைகளைச்சரிவரச்செய்ய வொட்டாமல் குடும்பக் குழப்பங்களுக் குக் காரணிகளாவதையும் சற்றேனும் சிந்தையிற் கொள்வதில்லை.

கூனியின் கொண்டாட்டம் தசரத குடும்பத்தை நிலை குலைத்து விட்டது.

சூரபன்மனுடைய தன்மான உணர்ச்சியினால் தேவர் சிறை விடுப்பு மறுப்பினால் அசுர குலமே பூண்டோடு பொன்றிப் போனதே..!

இந்தப் பரந்த பாரத கண்டத்தில் ஐந்து நாடு, ஐந்து ஊர், ஐந்து வீடு கொடுப்பத் துரியோதனாதியோர் மறுப்பு பாண்டவ கௌரவ குடும்பங் களையே பதம் பார்த்து விட்டதே. இந்த விதமாக அர்த்தமற்ற அனர்த்தங்கள் அளவற்றவற்றை இந்த அகிலமும் அறிந்துதான் வைத்திருக்கின்றது.

கணவன் வீட்டுக் கடமைகளைச் சரிவரக் கவனிக்கத் தவறினால் மனைவி யோடு முரண்பாடு கால்கொள்ளு கின்றது. மனைவி தன் வீட்டுக் கடமைகளை சரிவரச் செய்து முடிப் பதற்கு கணவனுடைய ஒத்துழைப்புச் சீரில்லாதலால் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளோடு ஒரு களேவரம் தலை தூக்குகின்றது. பிள்ளைகள் வீட்டுக் குழப்பத்தோடு கல்விச் சாலையை நாடுவதால் ஆசிரியர்களோடும் மனக் கசப்பு உருவாகிறது. இந்த நிலை ஆசிரியர்களுக்கும் இல்லை என்று உறுதிப்படுத்த முடியாது. இந்த மாதிரி யான மாறுபாடுகள் அனந்தம்.

ஒருவரோடு குறைபாடு அவரோடு மட்டில் அல்ல. அவரோடு சம்பந்தப் பட்ட மற்றவரிடத்திலும் தாவுகின்றது. அதனால் என் கடனைச் சரிவரச் செய்தாலும் மற்றவர் கடமை என்னையும் பாதிக்குமாதலால் கடவுள்தான் என்னைக் காக்கும் கடனை கைதர வேண்டும் என்று பட்டினத்தடிகள் கடவுளிடத்தில் பாரத்தைப் போடுகின்றார்.

திருநாவுக்கரசு நாயனாரும் தம் கடமையில் நின்றும் தவறாதவரானார். தெய்வீக நெறியில் அவர் வழுவாக் கடமையை எடுத்தியம்புகின்றார். என் சிவபடைக்கலம் உன் நாமத்து அஞ் செழுத்து. என் நா அதைச் சொல்லத் தவறாது. நான் இடைக் காலத்தில் அடிமைப் பட்டவன் அல்லன். என்னுடைய ஏழு பிறப்பிலும் அடிமைத் தொண்டு புரிகின்றேன். நீ விலக்கினும் நான் விலகிச் செல்லேன். கும்பிட்டு வணங்கித் தூய திருநீறு அணிந்து அடைக்கலம் ஆனேன். அழகிய சிற்றம்பலத்தில் ஆடும் சிவபெருமானே.

**படைக்கல மாக உன் நாமத்தெழுத்**
**தஞ்சென் நாவிற் கொண்டேன்**
**இடைக்கலம் அல்லேன் எழுபிறப்**
**புமுனக் காட்செய் கின்றேன்**
**துடைக்கினும் போகேன் தொழுது**
**வணங்கித் தூநீ றணிந்துன்**
**அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச்**
**சிற்றம் பலத் தரனே**

*(4ஆம் திருமுறை.)*

அடைக்கலக் காரனை அடைவுகாரர் அரவணைக்க வேண்டியது அவர் கடன் அன்றோ.

அவரவர் தமது கடமையிலிருந்து தவறி வாதிடும் போது, "என் வேலையை நான் பார்ப்பேன். உன்னுடையதை நீ சரியாகப் பார்" என்று அன்றாடம் பேச்சு வழக்கில் கேள்விப்படுகின்றோம். இதனால் அறியக் கிடப்பது என்ன? இருவரும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவில்லை.

இந்தக் கடமை தவறுதல் பண்டைக் காலத்திலும் இருந்துள்ளது போலும். இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூற்றுப் பாடல் ஒன்று அவரவர் கடமைக்கு வரை வகுப்பதால் அறிய முடிகின்றது.

பொன்முடியார் என்ற சங்கப் புலவர் தமிழ்த்தாய் கூற்றாக அந்த சிந்தனையை வெளிப்படுத்துகின்றார்.

தாயாகிய என் கடமை பிள்ளையைப் பெற்று திடசாலியாக வளர்த்து விடுதல், "ஈன்று புறம் தருதல் என்தலைக் கடனே அவனை உலகோர் புகழ அறிவுடைய னாக்குவது தந்தைக்குரிய கடமையாகும்.

சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே, வேலை உருவாக்கிக் கொடுத்தல் கம்மியன் கடமையாகும். வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே, அவனுக்கு ஒழுக்க நெறியில் உதவுதல் அரசர் கடமை, நன்னடை நல்கல் வேந்தர்க்கு கடனே, சுடர் வாளினைப் போர்க் களத்தில் சுழற்றிப் பகை அரசன் யானையை வீழ்த்தி மீளுதல் பிள்ளையின் கடமையாகும். ஒளிறுவாள் அருஞ்சமர் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே,

இனிப் புறநானூற்றில் வரும் முன் னூற்றுப் பன்னிரண்டாம் பாடலை முழுவது மாய்ப் பார்ப்போம்,

**ஈன்றுபுறம் தருதல் என் தலைக் கடனே**
**சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிருவாள் அருஞ்சமர் முருக்கிக்**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.**

தாயின் கடன் - தனயன் கடன் - தந்தை கடன் - மைந்தன் கடன், கொல்லன் கடன்- குமரன் கடன்,

காவலன் கடன்- காளை கடன் என்று கடமைகளைப் பிரித்துக் காட்டியது போல அடியார் கடமை அரசன் கடமை என்று திருநாவுக்கரசு நாயனாரும் பிரித்துக் காட்டும் பண்பு ஒப்பிட்டு நோக்கத் தக்கது ஒன்று.

பதியின் கடமை அடியேனைத் தாங்குதல். என் கடமை பணி செய்து கிடப்பது.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன் தென் கடம்பைத் திருக்கரக்கோயிலுள் ளான் அவன் கடன் ஏழையேனைத் தாங்கிக் கொள்ளுதல். ஏழையேன் கடன் பணி செய்தல்.

**நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்**
**என்க டன்பணி செய்து கிடப்பதே.**

*(ஐந்தாம் திருமுறை)*

அதே போல் பட்டினத்தடிகள் அனாதியிலிருந்து தாம் பிறவிகள் தோறும் பட்ட இன்னல்களைப் பரம்பொருளிடத்தில் பரிமாறி அதற்குத் தீர்வு "காத்தல் நின் கடனே" என்று திருக்கழுமலத்துப் பிரானிடத்தில் பிரார்த்திக்கின்றார்.

"பட்டது போதும் பரனே! என்று பட்டினத்தடிகள் பிறவிகள் தோறும் தாம் பெற்ற துயரத்தைப் பின்வருமாறு எடுத்து இயம்புகின்றார்.

"வழுவாக் காட்சி நல்கும் திருக்கழுமலத்துக் கடவுளே! முற்றாத இளந்தனப் பாவையோடு வீற்றிருக்கும் பரம யோகியே! யான் ஒன்று பகர்வேன்.

**"................. கழுமல வாணநின்**
**வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்**
**பாவையுடன் இருந்த பரம யோகி**
**யானொன் றுணர்த்துவன்"**

"எம்பெருமானே முன்னாளில் அகில உலகங்களையும், அனைத்துயிர்களையும் எல்லாவற்றையும் படைக்கப் பெருமான் எண்ணிய நாள் தொடங்கி எல்லையில்லாத பிறப்பும் மாறுபாடாக எவரும் எவையும் எனக்குத் தனித்தனியாகத் தாயாகியும் தந்தையுமாகாதவர் இல்லை.

**".......... எந்தை மேனாள்**
**அகில லோகமும் அனந்த யோனியும்**
**நிகிலமுந் தோன்றநீ நினைந்த நாள் தொடங்கி**
**எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்து**
**யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்**
**தாய ராகியும் தந்தைய ராகியும்**
**வந்தி லாதவர் இல்லை.**

நானும் அவர்களுக்குத் தந்தை யாகவும் வந்தவனானேன். அந்நாளில் நான் வந்து பிறவாத பூமியும் இல்லை. இறவாத நிலனும் இல்லை. நான் மாறுபட்ட பிறவிகளில் வந்தபோது என்னை உண்ணாத உயிர்களும் இல்லை, நான் அவை அனைத்தையும் தின்னாததும் இல்லை. அவ்வாறு என் காலமும் கழிவதாயிற்று.

**"................... முந்து**
**பிறவா நிலனும் இல்லை அவ்வயின்**
**இறவா நிலனும் இல்லை பிறிதில்**
**என்னைத் தின்னா உயிர்களும் இல்லை**
**யான் அவை**
**தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை**
**அனைத்தே காலமும் சென்றது........"**

"நாயேன்" நான் இன்னும் இளைக்கவும் கில்லேன். அணையாத ஒளியே! நின்னுடைய ஐந்தெழுத்தைச் சொல்லும் வேதாகமங்களைப் பயின்றதும் இல்லை. ஆகம அர்ச்சனை அறியவும் மாட்டேன்.

"............. யான் இதன் மேலினி
இளைக்குமா றிலனே நாயேன்
நாந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலும்
தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே"

ஆனாலும் சந்தர்ப்பம் வாய்க்கும் வேளை எல்லாம் சாத்துவது மலராக வாய்ச்சொல் மந்திரமாக ஏற்றருள்க. துன்பத்துக்கு அறிகுறியான பிறப்பு இறப்பு என்னும் பெருங் கடலில் விழாவண்ணம் காத்தருள்வது நின் கடனேயாகும்.

".......... ஆயினும் இயன்றதோர் பொழுதில் இட்டது மலராகச் சொன்னது மந்திரமாக ஏற்று என்னையும் இடருக்கு ஏதுவான பிறப்பு இறப்பு என்னும் இருகடற் படாவகை காத்தல் நின் கடனே"

பதினோராம் திருமுறையில் இடம் பெற்ற பட்டினத்தடிகள் திருக்கழுமல மும்மணிக்கோவை ஏழாம் பாடல்.

................ கழுமலவான நின்
வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவையுடன் இருந்த பரம யோகி
யானொன் றுணர்த்துவன் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகலமும் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்படும் பேதத்து
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியும் தந்தைய ராகியும்
வந்தி ராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை யான் அவை
தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை அனைத்தே
காலமும் சென்றது யான் இதன் மேலினி
இளைக்குமா றிலனே நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலும்
தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே ஆயினும்
இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திர மாக என்னையும்
இடர்பிறப் பிறப்பெனும் இரண்டின்
கடற்ப டாவகை காத்தல்நின் கடனே.

உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.

# விரத விழுமியங்கள்

**தனித்திரு - பசித்திரு - விழித்திரு**

விரதத்தின் முக்கிய அம்சங்களாக இவை மூன்றும் உள்ளன. தனித்திருத்தல் ஆன்மீக சாதனையாகும். இயல்பாகவே ஆன்மாவானது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களுடன் கூட்டுச்சேர்ந்தே காணப்படுகின்றது. இவற்றினின்றும் படிப்படியாக விலகியும், உலகப் பற்றுக்கள், பந்தங்களுடன் சேர்ந்திருக்காது அவற்றினின்றும் விடுபட்டுச் சுதந்திரமாக இருத்தல் தனித்திருத்தல் ஆகும். நாம் நாமாகவே இருத்தல் விரதத்திற்கு அவசியமாகும். அப்போதுதான் நாம் சிவத்தோடு உபவாசம் செய்ய வாய்ப்பாக இருக்கும். ஒவ்வாதவைகளுடனும், ஒவ்வாதவர்களுடனும் கூட்டுச் சேர்ந்தால் இறைவனின் அருள் கிடைக்காது. இறைவனின் திருவருளைப் பெறுவதற்குக் கூடாதவற்றினின்றும் எம்மை விடுவித்துத் தனித்திருக்க வேண்டும். இறைவன் தானாகவே கீழிறங்கி வந்து எம்மை ஆட்கொண்டு அருள்பாலிப்பான், எம்முடன் சேர்ந்து உடனுறைவான். அதுவே உபவாசம் ஆகும். தனித்திருத்தல் விரத விழுமியம் ஆகும். மௌன விரதம் தனித்திருத்தலுக்கு உபகரமாக அமைகிறது.

பசித்திருத்தல் என்றால் மேலோட்டமாக நோக்கும்போது உணவு, நீர் உட்கொள்ளாதிருத்தல் அல்லது அவற்றைச் சுருக்கிக் கொள்ளுதல் என்ற கருத்தினைக் கொள்வர். பசியைப் பொறுத்தல் மூலம் - மன அடக்கம், புலனடக்கம் சாத்தியமாகிறது. பசிவந்திடப் பத்தும் பறந்திடும் என்பர். அப்படிப்பட்ட பசியைப் பொறுத்திருத்தல் விரதமாகும். பசி தாகத்தினால் ஏற்படுகின்ற கோபம், ஆத்திரங் கொள்ளல், பொறுமையின்மை, வன்முறைகள், மயக்கம், கொடும் பேச்சு முதலிய தீய உணர்ச்சிகளை அடங்கச் செய்தல், பொறுத்தல், தாங்கிக் கொள்ளல் என்பன விரதமாகும். பசித்திருத்தல் விரத விழுமியம் ஆகும். இறைவனுடன் சேர்ந்து உடனுறைய வேண்டும் என்பதில் பசி; நல்லவற்றை நாடவேண்டும், நல்லவற்றைப் பேச வேண்டும், நல்லவற்றைப் புரிய வேண்டும், நல்லோருடன் இணங்கியிருக்க வேண்டும் என்பவற்றில் பசி, தாகம் ஏற்படுதல் பசித்திருத்தல் ஆகும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்னும் விழுமியம் விரதங்கள் ஊடாகச் செயற்பாடாகின்றது. ஒரு நேர உணவையோ, ஒரு நாள் உணவையோ விட்டுவிடுவதன் மூலம் பலரின் பசியைத் தீர்க்கக்கூடிய நிலைமை தோன்றுகின்றது. விரதத்தின் சமூகநோக்கும் உணர்தற்பாலது.

உபவாசம் என்பது அன்ன ஆகாரம் தண்ணீர் இன்றிப் பசித்திருத்தல் எனக் கொள்ளப்படுகிறது. எமது இறைவனுடன் மனம், வாக்கு, காயம் ஒப்ப உடனுறையும் போது தான் உபவாசம் என்னும் விரதம் நிறைவெய்துகிறது. நாம் இறைவனுடன் வாசம் செய்வோமானால், ஒவ்வொரு கருமத்தையும் ஆற்றப்புகுமுன் இறைவனை விசாரித்து நல்லவற்றைப் புரிந்து அல்லவற்றைப் புரியாது தவிர்த்து வாழலாமல்லவா?

விழித்திருத்தல் நித்திரை ஒழித்தல் மாத்திரமன்று. சிவனைத் தியானிப்பதில் வணங்கி வழிபாடு செய்வதில் விழிப்பாயிருத்தல்; நல்லவற்றைச் சிந்திப்பதில், பேசுவதில், புரிவதில் விழிப்பாயிருத்தல்; தீயனவற்றை விலக்குவதில் விழிப்பாயிருத்தல் என்பனவும் அடங்கும். விழிப்பாயிருத்தல் விரத விழுமியம் ஆகிறது.

முக்கியமாக மனத்தையும், ஐம்புலன்களையும் நாம் ஆட்சி செய்ய வேண்டும். அவற்றிற்கு நாம் அடிமையாதல் ஆகாது. இந்நிலையை நாம் அடைவதற்கு உதவுவது விரதங்களேயாகும்.

நன்றி - இந்து ஒளி

# சித்திராபூரணை

சைவ சமய விரதநாட்களில் சித்திரா பூரணை சிறப்புக்குரியது. குறிப்பாக தாயை இழந்தவர்கள் பெற்ற தாயை நன்றியோடு நினைந்து இவ்விரத நாளை அனுட்டிப்பர். சித்திரை மாதம் தேவர்களுக்கு 15 நாழிகை முதல் 20 நாழிகை வரையுள்ள ஐந்து நாழிகைப் பொழுதாகும். அது அவர்கட்கு மத்தியான வேளையாகும். மத்தியான வேளையும் பிதுர் காலமுமொன்றாதலால் இம்மாதப் பூரணை மிக விஷேடமானதாகும். சித்திரை மாதமென்பது சித்திரை நட்சத்திரத்தோடு மதியாகிய சந்திரன் நிற்குங் காலமாகும். அச்சமயம் பூமி மேட ராசியில் நிற்கின்றது. சித்திரைக்குச் சித்திரை விஷேடமான தினம் எனத் திருவிளையாடற் புராணங் கூறுகின்றது.

சித்திரைப் பூரணை நாளில் ஆலயங்களில் சித்திர புத்திர நாயனார் கதை படிக்கப்பட்டு சித்திரைக் கஞ்சி படைத்துப் பக்தர்களுக்கு வழங்கும் பண்பாடு நிலைபெற்று வருகிறது. பாவ புண்ணியங்களைக் கணக்கெடுப்பவராக சித்திர புத்திரனாரை கருதி வழிபாடு செய்வது வழக்கமாகும்.

ஆயிரங் கிங்கிலியர் அசைக்க வொண்ணாப் புத்தகமும்
பொன்னினெழுத் தாணியுமே பொற்பாகக் கைபிடித்துக்
காதிலிடுங் குண்டலமுங் கணக்காகத்தான் பூட்டி
அரனார் திருவருளால் ஆவின் வயிறு விட்டுப்
பொன்னின் கலத்திற் பிறந்தார் புகழ் வீரர்

பூமி வழி சிறக்கப் போர் வேந்தர் வந்துதித்தார்
பாவபுண்ணியங்கள் பதிந்தெழுத வந்துதித்தார்

எனப் புகழேந்திப் புலவரியற்றிய சித்திரபுத்திரநாயனார் கதை செப்புகிறது.


## சிவபூமி கண்தானச் சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள்
உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு
ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும்போதே

இப்புண்ணிய காரியத்துக்கு
ஒப்புதல் தாருங்கள்.


தொடர்புகளுக்கு :
ஆறு. திருமுருகன்
தொலைபேசி :
021-2 6550

கண் வைத்திய நிபுணர்கள் :
குகதாசன் 021-2223645
சிவந்தா. 021-2223149
யாழ். போதனா வைத்தியசாலை

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**கும்பாபிஷேகம் :**

கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதி கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானப் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருவிழா 21-04-2010 புதன்கிழமை நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. பிரதம குருவாக முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் பணியாற்றவுள்ளார்.

**திருத்தேர் வெள்ளோட்டம் :**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலுக்கு புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெற்றது. சிற்ப வித்தகர் புத்தூர் திரு. செல்லையா பாலசந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் திருத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது.

அல்வாய் ஆலடி விநாயகர் ஆலய திருத்தேர் வெள்ளோட்ட விழா 24-04-2010 நடைபெறவுள்ளது. சிற்பஜோதி சீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் அவர்களின் கைவண்ணத்தில் இத்திருத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது.

**கரவெட்டி பிரதேச செயலகத்தில் சைவ சமயக் கருத்தரங்கு :**

கரவெட்டி பிரதேச செயலகம் சைவ சமய ஆலோசனை சபையை நிறுவி பல்வேறு சமயப் பணிகளை ஆற்றி வருகின்றது. பிரதேச செயலர் திரு. சத்தியசீலன் அவர்களின் அயராத முயற்சியால் ஆலய அறங்காவலர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு 18-04-2010 செயலாக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. சைவசமய நெறி முறைகள் தொடர்பான ஒலிப்பதிவு இறுவெட்டு மேமாதம் மேற்படி சபையால் வெளியிடப்படவுள்ளது.

**கலைஞர், சமய சமூக சேவையாளர்**
**திரு. இராசையா ஸ்ரீதரன் கௌரவிக்கப்பட்டார்:**

சமயச் சொற்பொழிவுகள், வில்லிசைக் கலை போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவரும் பத்திரிகைத் துறையில் நீண்டகாலம் பணியாற்றியவருமான திரு. இராசையா ஸ்ரீதரன் அவர்களின் மணிவிழாக் குறித்து நல்லூர் அத்தியடிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் தலைமையில் சிறப்பு வைபவம் இடம்பெற்றது. நல்லை ஆதீன குருமுதல்வர் பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவித்தார்.

**தெல்லிப்பழை - மல்லாகம் சாளம்பை முருகன் ஆலயம் கும்பாபிஷேகம் :**

05-05-2010 காலை மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. ஆலயத்தில் பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு ஆலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

**தஞ்சைப் பெருங்கோயில் ஆரம்பித்து 1000 வருடம் பூர்த்தி :**

இவ்வாண்டு தஞ்சைப் பெருங்கோவில் ஆரம்பித்து 1000 வருடம் பூர்த்தி ஆவது குறித்து பல்வேறு விழாக்கள் நடைபெறவுள்ளது. தமிழக அரசு தஞ்சை சிறப்புக் குறித்து விழா ஏற்பாடு செய்து வருகிறது.

# தமிழர் திருமணமா?
# தமிழ்த் திருமணமா?

Dr. இ. லம்போதரன் அவர்கள்

இன்று பலர் தமிழர் திருமணம் பற்றியும் தமிழ்த் திருமணம் பற்றியும் பேசியும், எழுதியும் வருகின்றனர். சில திருமணங்கள் இதுதான் தமிழர் திருமண முறை என்று சொல்லப்பட்டு நடக்கவும், நடாத்தவும் படுகின்றன. தமிழர் திருமணம் என்ற இத்திருமணங்களில் மணவினை முறைகள் இவற்றைப் பேசுபவரினதும், எழுதுபவரினதும், நடத்துபவரினதும் தனிப்பட்ட சொந்த அபிமானங்களுக்கும், கருத்துகளுக்கும், விளக்கங்களுக்கும் ஏற்ப பல வேறுபாடுகளைக் கொண்டதாக இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

**உண்மையில் தமிழரின் திருமண முறை எது?**

**எமது வரலாற்றிலே, இலக்கியங்களிலே, பண்பாட்டிலே வழங்கிவந்த வருகின்ற தமிழர் திருமண முறைகள் யாவை?**

**பலர் கூறுவதுபோல எமது இன்றைய திருமணச் சடங்குகள் இடையிலே புகுத்தப்பட்ட சடங்குகளா?**

**தமிழ்ப் பண்பாடு என்ற பெயரிலே எமது பண்பாட்டுக்குப் புறம்பான திருமணச் சடங்குகளினாலும், புதிதான திருமணச் சடங்குகளினாலும் நாம் குழம்புகின்றோமா?**

இந்த வினாக்களுக்கான விடைகளை எமது வரலாற்று இலக்கிய ஆதாரங்களுடன் சற்று ஆராய்வோம்.

**சங்க இலக்கியங்களில் தமிழர் திருமணம் :**

தமிழிலே இன்று எமக்குக் கிடைக்கின்ற பழமையான நூல் தொல் காப்பியம். இது தமிழ் வளர்த்த இரண்டாவது சங்கம் எனப்படும் இடைச்சங்க காலத்து நூலாகும். இத்தோடு பல இடைச்சங்கத்து நூல்களும் அதற்கு முந்திய முதற்சங்கத்து நூல்களும் கடற்கோளினால் அழிந்து போயின என்று அறிகின்றோம். தொல்காப்பியத்துக்கு முன்னரேயே ஒரு பலமான, உரமான, தமிழ்ப்பண்பாட்டு, வரலாற்று, இலக்கிய, இலக்கண, வாழ்க்கை மரபு வழங்கி வந்திருப்பது தொல் காப்பியத்தில் இருந்து புலனாகின்றது. இந்நூல் ஆகக் குறைந்தது இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டு நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையிலே, நான்கு வேதங்களும் உணர்ந்த அறிஞன் அதங்கோட்டாசான் என்பவனுடைய முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதாக பனம்பாரனார் எழுதிய தொல்காப்பியத்தின் தொடக்கத்திலே உள்ள பாயிரம் குறிக்கின்றது.

"நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரிதபத் தெரிந்து"

– தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம்.

தமிழரின் தொன்மையான நூலாம் தொல்காப்பியம் பாடப்பட்ட காலத்திலிருந்தே வேதங்களும், அவற்றை உணர்ந்த அந்தணர்களும் தமிழ்ப் பண்பாட்டின் இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றனர் என்பது தெளிவு.

இதே தொல்காப்பியத்திலே தமிழர்களின் திருமண நெறிகளில் ஒன்றாகிய மற்றையோர் அறியாமல் காதலர் கூடிச்சேரும் களவு நெறியானது மறையோர்கள் வகுத்த எட்டு வகையான திருமணங்களில் ஒன்றான காந்தர்வ மணத்துக்கு ஒப்பானது என்று கூறப்படுகின்றது.

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழத் துணைமையோர்இயல்பே"

– தொல்காப்பியம். பொருள் – 89.

இதற்குமாறாக கொள்ளுதற்குரிய மரபினையுடைய மணமகன் தனக்கு சடங்கு மூலமாகக் கொடுக்கப்படுகின்ற மணமகளை ஏற்றுக்கொள்ளுதல் கற்பு மணம் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

– தொல்காப்பியம். பொருள் 140

அதேவேளை இவ்வாறு கொள்வோரும் கொடுப்போரும் இல்லாமலும் கலியாணம் இருக்கலாம் என்றும், அது காதலனும் காதலியும் ஒன்று சேர்ந்து ஓடிப்போகும் போதாகும் என்றும் கூறப்படுகின்றது.

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்து உடன் போகிய காலை யான"

தொல்காப்பியம். பொருள் 141

சாதிமுறைச் சமுதாயத்தில் மேற்சாதிக்காரர் ஆகிய அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூன்று குலத்தோருக்கும் உரியதாகிய சடங்குடன் கூடிய திருமணம் தொல்காப்பியத்துக்கு முந்திய காலத்திலே நாலாவது சாதிக்காரருக்கும் உடையதாக இருந்தது என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது.

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே"

– தொல்காப்பியம். பொருள் 142

அந்தணர் தீவலம் போன்ற சடங்குகள் இல்லாமல் உறவினருக்கு விருந்து படைத்து முதிய பெண்களே மணமக்களைச் சேர்த்து வைக்கும் நடைமுறையை அகநானூற்றில் காண்கின்றோம்.

'உழுந்துதலைப் பெய்த கொழுந்தனி மிதவை'

– அகநானூறு 86

'மைப்புறப் புழுக்கி னெய்க்கனி வெண்சோறு'

– அகநானூறு 136

நமது காலத்திலேயும் தாயகத்துக் கிராமங்களிலே "சோறு கொடுத்தல்" என்னும் எளிமையான உறவினர்களின் ஒன்றுகூடல் விருந்துடன் தாலி, தீ வலம் வருதல் போன்ற சடங்குகள் இல்லாமல் மணமக்கள் ஒன்று சேர்க்கப்பட்டு வந்த, வருகின்ற வழமையை இத்தோடு ஒப்பு நோக்கலாம். ஆரோக்கியமாக இருந்த ஆண், பெண் உறவில் பொய்யும், ஏமாற்றும் புகுந்து பிரச்சினைகளைக் கொண்டுவந்தபோது திருமணம் என்கின்ற சடங்கு வேதியர்களினால் உருவாக்கப் பட்டது என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது.

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

– தொல்காப்பியம். பொருள் 143

திருமணச் சடங்கை வகுத்ததோடும், அதனை நடத்துவிப்பதோடும் மட்டும் அந்தணரின் கடமை முடிந்துவிடவில்லை. காதலர்களின் நிலையை ஒருவருக் கொருவர் எடுத்துரைப்பதும், காதலின் போக்கு வரவுகளை அறிந்து கூறுதலும், காதலனின் உள்ளக் குறிப்பினை காதலிக்கு எடுத்துக் கூறுதலும், பசு போன்ற மிருகங்களின் மூலமாக அறிகின்ற நல்ல தீய நிமித்தங்களைக் காதலருக்குக் கூறுதலும், காதலன் பிரிந்து போனதைக் காதலியிடம் கூறுதலும், காதலன் பிரிந்து போகக்கூடாது என்று காதலிக்காக காதலனிடம் வேண்டுவதும் ஆகிய தூதுகள் பார்ப்பார் செயல்கள் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இதிலிருந்து சாதாரண மக்களின் அன்றாட வாழக்கையுடன் மட்டுமல்லாது அந்தரங்க வாழ்க்கையுடன் கூடவும் இறுக்கமாகப் பின்னிப் பிணைந்திருந்த அக்கால அந்தணர்களின் சமூக நிலை தெளிவாகத் தெரிகின்றது.

'காமநிலை உரைத்தலும் தேர் நிலை உரைத்தலும்
கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்போர்க்கு உரிய'

தொல்காப்பியம். பொருள் 175

**ஐம்பெருங் காப்பியங்களில் தமிழர் திருமணம் :**

தமிழின் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் விண்மீனாகத் திகழும் கற்புக்கரசியாம் அருந்ததிக்கு நிகரான கண்ணகியைக் கோவலன் வயதில் முதிர்ந்த அந்தணன் ஒருவன் வேத முறைப்படி வளர்த்த தீயை வலம் வந்து மணம் புரிந்தான் என்று கூறுகின்றது.

'சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை'.

சிலம்பு. 51-53

இதேவிதமான திருமண முறை இன்னொரு ஐம்பெருங் காப்பியமான சீவகசிந்தாமணியிலும் கூறப்படுகின்றது.

**தமிழர் திருமணத்தில் தாலி :**

இன்று தமிழர்களின் திருமணத்தினதும் மணவாழ்க்கையினதும் மிக முக்கிய அம்சமான தாலி பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டாலும் அது திருமணத்துடன் தொடர்புடையதொன்றாக குறிப்பிடப் படவில்லை. ஆணுக்கும் ஆண் குழந்தைக்கும் உரிய அணியாகவே தாலி கூறப்பட்டிருக்கின்றது.

புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறார். – புறநானூறு. 374

முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்!
பொன்னுடைத் தாலி என் மகன் ஒற்றி. – அகநானூறு. 54

புறநானூற்றின் பாடல் ஒன்று பாண்டியன் தலையாங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பகைவரை வீழ்த்திவிட்டு நின்ற காட்சியை விளக்கும்போது சிறுவயதில் கட்டிய (ஐம்படைத்) தாலியை இன்னும் களையாத சிறுவன் என்று அவன் வயதுக்கு விஞ்சிய வீரத்தைப் புகழுகின்றது.

அவன் கண்ணி! தார்பூண்டு, தாலி
களைந்தன்றும் இலனே. – புறம் 77

பெரியபுராணத்தில் சேக்கிழார் தாலி பற்றி யாதொரு குறிப்பும் கூறவில்லை. பெரியபுராணத்தில் வேறொரு இடத்தில் தாலி என்பது இடுப்பில் அணியும் ஒரு அணியாகவே குறிப்பிடப்படுகின்றது.

இரும்புலி எயிற்றுத் தாலி இடையிடை மனவு கோத்து. – பெரியபுராணம்

ஐம்படை என்பது இன்றும் நாம் குழந்தைகளுக்கு அணியும் பஞ்சாயுதம் என்னும் அணியாம்

"ஐம்படை சதங்கை சாத்தி யணிமணிச் சுட்டி சாத்தி"

என்று சுந்தரர் குழந்தையாக இருந்தபோது அவருக்கு அணிவித்த அணிகளைப் பற்றிப் பெரியபுராணம் கூறுகின்றது.

முன்னர் குறிப்பிட்ட சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களில் அந்தணரால் செய்து வைக்கப்படும் வேதநெறிவழித் திருமணங்களே தமிழர் திருமணங்களாகக் குறிப்பிடப்பட்டாலும் தாலி பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை. பதினைந்தாம் நூற்றாண்டில் மொகலாயர்களின் படையெடுப்பு நடைபெற்றபோது அவர்களிடமிருந்து தற்காத்துக்கொள்ள பெண்கள் தாலி அணியத் தொடங்கினார்கள் என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. எது எவ்வாறு இருப்பினும் தாலி என்பது தமிழர் திருமணத்தினதும், பண்பாட்டினதும் இன்றியமையாத அம்சமாக இன்று திகழ்கின்றது.

**பெரியபுராணத்தில் தமிழர் திருமணம் :**

12ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரினால் பாடப்பட்ட பெரியபுராணத்திலும் சம்பந்தர் திருமணத்தில் திருமணச்சடங்குகளாகிய காப்புக் கட்டுதல், தீ வலம் வருதல், கைப்பிடித்தல், தாரை வார்த்தல் போன்றவை குறிப்பிடப்படுகின்றன. இங்கும் திருமணத்தோடு சம்பந்தமாக தாலி கூறப்படவில்லை. சம்பந்தர் தமிழினால் இறைவனைப் பாடிப்பரவிய பெருமகன். தமிழ்ஞானசம்பந்தன் என்று தன்னைத் தனது பாடல்களில் இனங் காண்பவர். ஆதி சங்கரருடைய வடமொழிப் பாடலாகிய சௌந்தரிய லகரியில் கூட திராவிட சிசு என்று அவரால் இனங்காணப்படுபவர். இவருடைய திருமணத்திலே,

**காதலியைக் காழிநா டுடையபிரான் கைப்பிடிக்க**

என்று மணமகன் மணமகளின் கை பற்றுதல் பற்றியும்,

**மருவியவோ ரையுங்கணித மங்கலநா ளவர்வகுப்பப்**
**பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி**

என்று திருமணத்துக்கு நல்லநாள் நேரம் கணித்தலையும், திருமண அழைப்பு அனுப்புதலையும்,

**நீடுநிலைத் தோரணங்க ணீன்மறுகு தொறுநிரைத்து**
**மாடுயரிங் கொடிமாலை மணிமாலை யிடைபோக்கிச்**
**சேடுயரும் வேதிகைகள் செழுஞ்சாந்து கொடுநீவிப்**
**பீடுகெழு மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார்**

**முன்றிறொரும் வாதிதொறு முகநெடுவா யில்கடோறு**
**நின்றொளிரு மணிவிளக்கு நிறைவாசப் பொற்குடங்க**
**டுன்றுசுடர்த் தாமங்க டூபங்க டுதைவித்தார்**

என்று தோரணங்கள், மலர் மாலை, மணி மாலைகள், கொண்டு பந்தர்கள் அமைத்து அலங்கரிப்பதையும், வாசலில் நீண்ட நேரம் நின்று எரியும் விளக்குகள், நிறைகுடம், அணிதற்குரிய வாசனைப் பதார்த்தங்கள். தூபங்கள் வைத்தலையும்,

காறு சூடினார் அருட்திருக் காப்புநா ண்அணிவார்

என்றும்,

பந்தச் சார்பொ ழிப்பவர் திருக்கையிற் காப்புநாண் சாத்த

என்றும் காப்புக் கட்டுதலையும்,

மாதர் மைந்தர்பொற் காப்புநா ணகர்வலஞ் செய்தார்

என்று மணமகன் ஊர்வலமாக வருவதையும்,

வேதியர் வதுவைக் கோலம் புனைந்திட வேண்டு மென்னப்

பூதநா யகர்தங் கோயிற் புறத்தொரு மடத்திற் புக்கார்

என்று மணமகன் மணக்கோலம் பூணுவதற்கு தயாராவதையும்,

பொற்குட நிறைந்த வாசப் புனிதமஞ் சனநீராட்டி

விற்பொலி வெண்பட் டாடை மேதக விளங்கச் சாத்தி

நற்றிரு உத்தரீயம் நறுந்துகில் சாத்தி நானப்

பற்பல கலவைச் சாந்தம் மானமையில் அணிந்த பின்னர்

என்று மணமகன் நீராட்டப்பட்டு, பட்டாடை, ஆபரணங்கள், வாசனைத் திரவியங்கள் அணிவித்து அலங்கரிக்கப்படுவதையும்,

முற்றுமெய்ஞ் ஞானம் பெற்ற மூர்த்தியார் செங்கை பற்ற

புண்ணிய விளைவு போல்வர் பூம்பந்தர் முன்பு சார்ந்தார்

என்று மணமகளைக் கைப்பிடிக்க பூக்களால் அமைக்கப்பட்ட மணவறைக்கு மணமகன் வருவதையும்,

பெருமகிழ்ச் சியினாற் பாதம் விளக்குவார் பிள்ளையார்முன்

என்று மணமகளின் பெற்றோர் மணமகனின் பாதத்தைக் கழுவுதலையும்

பெருகொளி ஞான முண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னின்

மருவுமங் கலநீர் வாசக் கரகமுன் னேந்தி வார்ப்பார்

தருமுறைக் கோத்தி ரத்தின் தங்குலஞ் செப்பி எந்தன்

அருநிதிப் பாவை யாரைப் பிள்ளையார்க்(கு) அளித்தேன் என்றார்.

என்று குலத்து முன்னோர்களின் வழிமுறையைக்கூறி, நீர் வார்த்து, தத்தம் செய்து, எனது மகளை உமக்கு அளித்தேன் என்று கூறுதலையும்,

மறையொலி பொங்கி யோங்க மங்கல வாழ்த்து மல்க

நிறைவளைச் செங்கை பற்றி

என்று மங்கல இசையும், வேத ஒலியும் ஒலிக்க மணமகளின் கை பற்றுதலையும்

மந்திர முறையால் உய்த்த எரிவலமாக

என்று மணமக்கள் தீ வலம் வருவதையும். மணவினைச் சடங்குகளாக பெரிய புராணத்தில் சம்பந்தர் திருமணத்தில் சேக்கிழார் அழகாகவும் விரிவாகவும் கூறுகின்றார்.

**ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் தமிழர் திருமணம் :**

கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் தன்னுடைய பாடல்களில் தோரணம் கட்டுதல், பந்தல்கால் நாட்டுதல், கைத்தலம் பற்றுதல் போன்ற திருமணச் சடங்குகளைப் பாடியுள்ளார். இங்கும் நாச்சியார் திருமணச்சடங்குகளில் தாலி பற்றிப் பாடவோ, குறிப்பிடவோ இல்லை என்பது நோக்கத்தக்கது.

வாரணமாயிரம் சூழவலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றான்

என்று மணமகன் ஊர்வலமாக வருதலையும்,

பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்ட

என்று எங்கும் நிறைகுடமும், தோரணமும் கொண்டு அலங்கரிப்பதையும்,

நாளை வதுவை மணமென்று நாளிட்டு

என்று மணநாள் குறிக்கப்படுதலையும்

பாளைகமுகு பரிசுடைப் பந்தற்கீழ்

என்று தென்னம்பாளை கமுகு கொண்டு மணப்பந்தல் அலங்கரிக்கப்படுதலையும்,

கோடி யுடுத்தி மணமாலை அந்தரி சூட்ட

என்று மணமகள் மணமகனின் சகோதரியால் புத்தாடை உடுத்து, மணமாலை சூடப்பட்டு அலங்கரிக்கப்படுவதையும்,

பாரப்பனச்சிட்டர்கள் பல்லார்

என்று அந்தணப் பெருமக்கள் மணவினையை நடத்தி வைப்பதையும்

புனிதனோ டென்னைக்காப்புநாண் கட்ட

என்று மணமக்களுக்கு காப்புக் கட்டுதலையும்

கதிரொளி தீபம் கலச முடனேந்திச்
சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள

என்று ஆடல்களில் வல்ல அழகான இளம் பெண்கள் தீபம், குடம் முதலான மங்கலப் பொருட்களை ஏந்தி மணமகனுடன் வருவதையும்,

மத்தளம் கொட்ட வரிச்சங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்ற

என்று மங்கல வாத்தியங்கள் ஒலிக்க முத்து மணவறையின் கீழ் மணமகன் மணமகளின் கை பற்றுவதையும்,

வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்

என்று வேதியர்கள் வைத மந்திரங்களை மணவினையில் ஓதுவதையும்,

என் கைப்பற்றி தீவலஞ் செய்ய

என்று மணமக்கள் கைப்பிடித்து தீவலம் வருவதையும்,

செம்மை யுடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்க

என்று மணமகன் தன் கையால் மணமகளின் காலைப்பற்றி எடுத்து அம்மி மிதிக்க வைப்பதையும்,

எரிமுகம் பாரித்து என் னைமுன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என் கைவைத்து
பொரிமுகந்து அட்ட

அக்கினியைப் பார்த்து மணமனுக்கு முன்புறமாக மணமகளை நிற்க வைத்து மணமகளின் கைமேல் மணமகளின் கையை வைத்து அதிலிருந்து பொரிகளை அக்கினியில் சொரிதலையும்,

குங்குமம் அப்பிக் குளிர் ாந்தம் மட்டித்து
மாங்கலவீதி வலஞ் செய்து

என்று மணவினையின் பின்னர் மண மக்கள் ஊர்வலம் வருவதையும் அப்போது அவர்களுக்கு மக்கள் அலங்கார வாசன னத்திரவியங்களைச் சாத்துவதையும்

அங்கவனோடும் உடன் சென்றங்கு ஆனைமேல்

என்று மணவினையின் பின்னர் ம ணமகன் மணமகளுடன் யானை போன்ற வாகனங்களில் இவ்வாறு ஊர்வலம் வ( நவதையும்,

மஞ்சனமாட்ட

என்று மணவினையின் பின்னர் கை ரப்பெல்லாம் தீர மணமக்கள் இருவரையும் வைத்து நீராட்டுதலையும், ஆண்டா ர் தன்னுடைய நாச்சியார் திருமொழி என்ற நாலாயிர திவ்வியப்பிரபந்தப் பா _ல்களிலே மிகவும் அழகாக, ஒழுங்காக, விபரமாகக் குறிப்பிடுகின்றார்.

**திருவாசகத்தில் திருமணம் :**

ஒன்பதாம் நூற்றாண்டில் மாண ிக்கவாசகர் பாடிய திருவாசகம்

உன்கையிற் பிள்ளை உ ்க்கே அடைக்கலம்
என்றப் பழஞ்சொல் புது நம்

என்று காலம் காலமாக மணமகள ின் பெற்றோர் இவ்வளவு நாளும் தமது பிள்ளையாக இருந்த பெண் இன்று தொடக்கம் உனக்கே அடைக்கலம் என்று மணமகனுக்குச் சொல்லி தமது ெ பண்ணை ஒப்படைக்கும் வழமையைக் கூறுகின்றது.

தமிழர் திருமண நெறி பற்றி ப ஆதாரத்துடன் கூடிய இத்தகவல்களை தமிழ்ப் பற்றும், காதலும் உடைய ெ பருமக்கள் மற்றவர்களுக்கும் அறிவித்துப் பகிர்ந்து பயனடைய வேண்டும். திரு மணம் செய்யும் மணமக்களும், அவற்றைச் செய்விக்கும் பெற்றோர்களும், திரு மணத்திற்கு வருவோரும்கூட இவைபற்றி அறிந்திருத்தல் திருமணத்தை மேலு ம் இரசனையும், அனுபவிப்பும், கலாச்சார பண்பாட்டு உடைமையும் உள்ள நி கழ் ்வாகப் பரிணமிக்கச் செய்யும்.

# கலை நிகழ்ச்சிகள்















நல்லை ஆதின முதல்வர் பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர்கள் கெளரவ விருந்தினர்
சகிதமாக ஆலய முன்றலில் ஊர்வலம் ஆரம்பம்



துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் ஓவியக் கண்காட்சியை
பிரதம நீதியரசர் ,மாவட்ட நீதிபதி ஆகியோர் பார்வையிடும் காட்சி

பிள்ளையார் அச்சகம்,நல்லூர்.